+1 2801479

No. of Printed Pages : 8

**3401 (NS)**

பதிவு எண் | M | A | R | 2 | 0 | 2 | 0 |

# பகுதி I – பொதுத் தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ]　　　　[ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

## பகுதி - I

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.　　　　**14x1=14**

1. வடகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை :

(அ) நாரை　　　　(ஆ) தூக்கணாங் குருவி

(இ) உள்ளான் பறவை　　　　(ஈ) கழுகு

2. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | குண்டலப்பூச்சி | (i) | பாடகம் |
| (ஆ) | விரியன் | (ii) | தண்டை |
| (இ) | திருகுமுருகு | (iii) | சிலம்பு |
| (ஈ) | சாழல் | (iv) | விளையாட்டு |

[ திருப்புக

3. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர் :

(அ) பேரணாம்பட்டை (ஆ) ஆலப்புழை

(இ) தென்காசி (ஈ) புதுச்சேரி

4. கவிதையினைப் பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம். அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று கூறியவர் :

(அ) மகாகவி பாரதியார் (ஆ) இராசேந்திரன்

(இ) எர்னஸ்ட் காசிரர் (ஈ) வால்ட் விட்மன்

5. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ________ என்பதாகும்.

(அ) தாள் (ஆ) நூல்

(இ) ஓலை (ஈ) எழுத்தாணி

6. சாந்திநிகேதனத்தில் உள்ள மரம் :

(அ) சமேலி (ஆ) ஜூஹீ

(இ) பியால (ஈ) ஸேவுந்தி

7. பேசிடுக - என்பதன் இலக்கணக் குறிப்பு :

(அ) வியங்கோள் வினைமுற்று (ஆ) வினைத்தொகை

(இ) தொழில் பெயர் (ஈ) பெயரெச்சம்

8. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது :

(அ) மா முன் நேர் (ஆ) காய் முன் நேர்

(இ) காய் முன் நிரை (ஈ) கனி முன் நிரை

9. தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) மண் + வளம் - மெய் + மெய்

(ஆ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்

(இ) கடல் + அலை - உயிர் + மெய்

(ஈ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

10. Sailor - என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.

(அ) மாலுமி (ஆ) ஆவணம்

(இ) ஒப்பந்தம் (ஈ) இனக்குழு

11. ‘செவ்வி’ - என்னும் சிறுகதையின் ஆசிரியர் :

(அ) புதுமைப்பித்தன் (ஆ) நர்த்தகி நடராஜ்

(இ) பிரபஞ்சன் (ஈ) சி.சு. செல்லப்பா

12. Value Education - என்பதன் கலைச்சொல் :

(அ) குழுக் கல்வி (ஆ) ஆற்றல் கல்வி

(இ) மதிப்புக் கல்வி (ஈ) முது கல்வி

13. ‘‘கல்லதர்’’ - என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.

(அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்

(ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

(இ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

(ஈ) தனிக்குறில் முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

14. ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல் :

(அ) அச்சம் (ஆ) காய்ச்சல் (இ) கப்பல் (ஈ) தேர்தல்

[ திருப்புக

## பகுதி - II

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. **3x2=6**

**15.** தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது ?

**16.** மதீனா நகரம் ஒரு பொன்னகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

**17.** ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள
- இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது.

**18.** உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. **2x2=4**

**19.** 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

**20.** ''ஃப்ரெஸ்கோ'' என்ற சொல்லின் பொருள் யாது ? இவ்வகை ஓவியங்கள் எங்கு காணப்படுகின்றன ?

**21.** ''தொழு உரம்'' என்றால் என்ன ?

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. **7x2=14**

**22.** உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

**23.** ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.
(அ) தண்டுடை (ஆ) புவியாட்சி

**24.** உள்ளுறை உவமம், இறைச்சி விளக்குக.

**25.** மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.
(அ) # (ஆ) ^

26. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

(அ) மலிந்து (ஆ) அணிந்தேன்

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

வைகை

28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

பொரி, பொறி

29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்

## பகுதி - III

### பிரிவு - 1

2x4=8

குறிப்பு : **எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக.

31. ''சலச வாவியில் செங்கயல் பாயும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை ?

33. சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

34. இன்குலப், ''உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்'' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

[ திருப்புக

## பிரிவு - 2

குறிப்பு : **எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. **2x4=8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா ? - நும் கருத்தை எழுதுக.

36. மரபுவழிக் கல்வி முறைகளில் எவையேனும் இரண்டனை விளக்குக.

37. ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகளில் இடம் பெற்ற செய்திகளை விவரிக்கவும்.

38. கற்றளிக் கோவில்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுகள் தருக.

## பிரிவு - 3

குறிப்பு : **எவையேனும் மூன்றனுக்கு** விடையளிக்கவும். **3x4=12**

39. வேற்றுமை அணி (அ) உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன் விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.

    பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், முகவரி, அலைபேசி எண், கல்வித் தகுதி, அறிந்த மொழிகள்.

41. அன்னை (அ) சுற்றுச்சூழல் ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை எழுதுக.

42. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

    (மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி)

    1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் __________.
    2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் __________.
    3. அறிவின் பெயரும் அது தான்; அம்புலியின் பெயரும் அதுவே தான் __________.
    4. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே __________.

**43.** தமிழாக்கம் தருக.

1. You must be the change you wish to see in the world.
2. Nobody can hurt me without my permission.
3. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
4. An eye for an eye only ends up making the whole world blind.

**43.** காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழு கூடல்'' என்ற விடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன ''தமிழ் இவை பத்துமே'' மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ்மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**வினாக்கள் :**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை ?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது ?

[ திருப்புக

## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x6=18

**44.** (அ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை ?

**அல்லது**

(ஆ) இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் திருச்சாழல் மூலம் மாணிக்கவாசகரின் மொழி விளையாட்டினை விவரிக்கவும்.

**45.** (அ) சுந்தர ராமசாமியின் ''காற்றில் கலந்த பேரோசை'' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

**அல்லது**

(ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

**46.** (அ) ''வாடிவாசல்'' கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**47.** அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

(அ) ''நான் என்பாய் அது'' - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

(ஆ) ''செயல்'' - என முடியும் குறளை எழுதுக.

-oOo-